## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.91/2021

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 13 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.T.இந்திரஜித், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 19.02.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜேஷ் (DW–1 ) | வயது | : | 47/2026 |
| க/த பெயர் | : | திரு. கலியபெருமாள் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | ஆலங்கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்து ஏற்கனவே எனது தகப்பனாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணமான 2018 இல் செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் தாவா சொத்து எனக்கு சொந்தம் என்று கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் பட்டா, சிட்டா ஆவணங்களான பி.சா.ஆ.2, 3 ஆவணங்கள் எனது பெயரில் ஏற்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தில் எத்தனை தென்னைமரங்கள் உள்ளது என்றால் 17 தென்னைமரங்கள் உள்ளது, அதன் வயது 20 வருடத்திற்கு மேற்பட்டது. பி.சா.ஆ.1 ஆவணத்தில் 17 தென்னைமரங்கள் இருக்கம் விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.
2) தாவா சொத்தில் உள்ள தென்னைமரங்கள் வாதியின் மாமனார் மாயகிருஷ்ணன் வைக்கப்பட்டது என்றால் சரியல்ல. மாயகிருஷ்ணனுக்கு பின்னர் தாவா சொத்தில் உள்ள தென்னைமரங்களை அவரது வாரிசுதாரர்களான வாதிதான் பராமரித்து, அனுபவித்து வருகிறார் என்றால் பிரச்சனைக்கு பிறகு அவ்வாறு அனுபவம் செய்து வருகிறார். மாயகிருஷ்ணன் இறந்த பின்னர் தாவா சொத்தின் அனுபவம் வாதியிடம் இருந்து வருகிறது என்றும் மேற்கண்ட விபரத்தை மறைத்து வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
3) தாவா சொத்தில் எனக்கு உரிமை இருப்பது போல் காண்பிக்கவேண்டும் என்பதால் தான் தாவா சொத்தில் உள்ள தென்னைமரங்களை மறைத்து பி.சா.ஆ.1 ஆவணம் அவசர கதியில் மோசடியாக ஏற்படுத்திக் கொண்டேன்

என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து விபரமும் தவறானது என்பதால் மேற்கண்ட ஆவணம் மோசடியானது என்பதால் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

**வாதியின் கற்றறிந்த வழக்கறிஞர் மேலும் சில ஆவணங்களை பரிசீலனை செய்து சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.20 10:24:50 +0530

District Munsif
Mannargudi.